விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்


பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 19 | 03-03-2003 | திங்கட்கிழமை | ஓசை 13

வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடைவை உலகில் உங்களின்
நட்புக்கு.....
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தலைவருடன் ஆராயவே இங்கு வந்தேன்!

அரசியல் ஆலோசகர் வன்னி திரும்பிய வேளையில்...





## வன்னி திரும்பிய அரசியல் ஆலோசகர் மாலையில் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு

**எமது தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுக்கள் குறித்தும், அரசியல் சந்திப்புக்கள் பற்றியும், மேற்கொண்டு பேச்சுவார்த்தையில் முன்னெடுக்கப்படும் விடயங்கள் குறித்தும் கலந்துரையாடல்களை நடாத்தும் நோக்கத்துடன் இங்கு வந்துள்ளேன் என நேற்று வன்னி திரும்பியுள்ள அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதேவேளை, நேற்று மாலையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சந்தித்தும் உரையாடினார்.**

நேற்று பிற்பகல் 3.25 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த அன்ரன் பாலசிங்கம் மற்றும் துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோரை பொறுப்பாளர்களும், தளபதிகளும் வரவேற்றனர். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்சு.ப. தமிழ்ச்செல்வன்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தாய். தூதுவருடன் சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை சிறிலங்காவுக்கான தாய்லாந்துத் தூதுவர் ஜேம் ரொயினன் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்களும், தொல்காப்பியன், ஜோர்ச் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தாய்லாந்துத் தூதுக்குழுவில் சிறிலங்காவுக்கான தாய்லாந்துத் தூதுவருடன், வெளிவிவகார அமைச்சின் தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுக்கான பணிப்பாளர் பிரதாப் பிபிள் சோக்றும், வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய மற்றும் ஆசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் மெலிண்டா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளில் தாய்லாந்து அரசும் பங்கு கொள்வது குறித்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் அபிவிருத்திப் பின்னடைவுக்கு 30 ஆண்டுகள் ஆண்ட தலைவர்களே காரணம்

### சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா

சிறிலங்காவின் அபிவிருத்தியில் ஏற்பட்ட பின்னடைவுக்கு கடந்த 30 வருடங்களாக நாட்டை ஆண்ட தலைவர்களின் குறைபாடே காரணமாகும் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; அரசியல் தலைவர்கள் அனைவரும் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் கைவிட்டு தேசிய நலன் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பிரதம மந்திரியின் அமைச்சரவை நியமிக்கப்படுவ

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை மிகவும் அவதானத்துடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

சமாதான நடவடிக்கைகளை மிகவும் அவதானத்துடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் தவறான தீர்மானமொன்றை எடுத்தால் அதனால் முழு நாடும் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்பகுதி மக்களுக்கே போர் நிறுத்தத்தால் அதிகபயன்

### கொழும்பு பா.உ.. மனோ கணேசன்

(மட்டக்களப்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை காரணமாக வடக்கு கிழக்கு தமிழ்மக்களை விட தென்னிலங்கை சிங்கள மக்கள் தான் அதிகம் நன்மை அடைந்துள்ளார்கள் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் பாரிய முகாம் அமைக்கும் முயற்சியில் கடற்படை

நெடுந்தீவுப் பகுதியிலுள்ள ஈ.பி.டி.பி.யினரின் பாதுகாப்புக்காக நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா கடற் படையினர் அந்தப் பகுதியில் பாரிய முகாமொன்றை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த முகாமை அமைக்கும் முயற்சியில் அந்தப் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த முகாம் அமைக்கும் பணியை உடன் நிறுத்துவதற்கான பணிப்புரையினை வழங்குமாறு மக்கள் ஒன்றியம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர், உள்த்துறை அமைச்சர், சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுக்கு மனுக்களை அனுப்பி

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வலுவிழந்தோர் வாழ்வை மேம்படுத்தும் திட்டங்களை அமுல் செய்ய நடவடிக்கை

## பதிவுகளை மேற்கொள்ள வெண்புறா வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடுக்கோவில் வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள சகல வலுவிழந்தவர்களினதும் விபரங்களைத் திரட்டி அவர்களுக்கு பொருந்தக் கூடிய மறுவாழ்வு வசதிகளையும் வருமான அதிகரிப்புத் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு வெண்புறா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இத்திட்டத்திற்கான நிதியுதவிகளையும் பயிற்சித் திட்டங்களையும் வழங்கி இப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு யூனிசெவ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் முதலிய பன்னாட்டு உதவி நிறுவனங்கள் சம்மதம் தெரிவித்துள்ளன.

எனவே இத்திட்டத்தின் முதன்மைப் பணியாக பயனாளிகள் தெரிவு நடைபெறவுள்ளது. இத்தெரிவானது முல்லைத்தீவு, நெடுங்கேணி, மாங்குளம் கனகராயன்குளம், பனங்காமம், ஆண்டான்குளம், பூநகரி,பளை, தாளையடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர் பகங்களிலும் புதுக்குடியிருப்பு கைவேலியிலுள்ள எமது கிளை நிறுவனத்திலும் பங்குனி முதலாம் திகதி தொடக்கம் பதினைந்தாம் திகதிவரை நடைபெறும். ஆகையால் அவ்வப்பகுதியிலுள்ள உடல் ரீதியாக வலுவிழந்தோர் யாவரும் தமக்கு அருகில் உள்ள வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்களுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். வலுவிழந்த குடும்பத்தின் தலைவர் அல்லது தலைவி தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், குடும்ப அட்டை முதலியவற்றுடன் தமக்கருகாமையிலுள்ள தொடர்பகங்களில் தவறாது குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இக்காலப் பகுதிக்குள் தங்கள் பதிவுகளைச் செய்து கொள்ளாத எவரும் தமது திட்டத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் உதவிகளுக்கு உரித்துடையவர்களாகமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கல்விவசதிகள், வர்த்தக முயற்சி,குடிசைக்கைத்தொழில், நன்னீர் மீன்பிடிப்பு மற்றும் பல வருமான அதிகரிப்புத் திட்டங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. (அ)

# படுகாட்டுக்குளம் இதுவரை புனரமைக்கப்படவில்லை

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் உடைப்பெடுத்த வவுனியா கனகராஜன் பகுதி படுகாட்டுக்குளம் இது வரை புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனகராஜன் குளத்திற்கு தெற்குப் பகுதியில் உள்ள இந்தக் குளம் புனரமைப்பு செய்யப்பட்டால் குறைந்தது 40 ஏக்கருக்கு அதிகமாக நெற்செய்கைக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குளம் புனரமைக்கப்படாமையால் அப்பகுதி விவசாயிகளின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நெதர்லாந்து உதவி

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளகுடியமர்ந்த மக்களுக்கு உதவ நெதர்லாந்து அரசு முதற்கட்டமாக ஐந்து மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

முதற்கட்டமாக நிக்கொட் நிறுவனம் கரைச்சிப் பிரதேச பிரிவிற்குட்பட்ட திருவையாறு கிராம சேவகர் பிரிவில் 25,000 ரூபாய் கொடுப்பனவை 25 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் திருகோணமலை நிக்கொட் திட்ட பிரதிப் பணிப்பாளர் 25 குடும்பங்களுக்கான கொடுப்பனவுக் கடிதங்களை வழங்கினார்.

இவ்வார இறுதிக்குள் 175 குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என அரச அதிபர் தெரிவித்தார். மொத்தமாக கிளி. மாவட்டத்தில் 15421 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இதில் 2888 குடும்பங்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. (அ)

# களுத்துறை சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம் இரண்டாவது நாளாக தொடர்ந்தது

(கொழும்பு)

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையில் மேற்கொண்டுவரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது.

சிறைச்சாலையில் உள்ள 87 கைதிகளில் 61 தமிழ் அரசியல் கைதிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்துள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரையில் தமது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந் நிலையில் இந்தக் கைதிகளின் விடுதலை குறித்து சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். இதேவேளை தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து பிரதம நீதியரசர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் லொக்கு பண்டார கேட்டுக்கொண்டுள்ளார்.

# பாண்டியன்குளம் பிரதேச கமக்காரர்களுக்கான கலந்துரையாடல்

பாண்டியன்குளம் கமநல சேவையில் பாண்டியன்குளம் பிரதேச கமக்காரர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்போதைய சமாதான அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் கமக்காரர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது தேசிய எழுச்சிப் பேரவை தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் மாவீரர் துயிலும் இல்ல அபிவிருத்தி தொடர்பாகவும் இக்கூட்டத்தில் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. (07)

# பேடன் பவல் பிறந்த தினம்

சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிறந்ததின நிகழ்வும் அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலையில் சாரணியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும், மேற்படி பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது. சாரணியர் ஆசிரியர் சு.சுபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசியக் கொடியினை பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை யோகபுரம் ம.வி. அதிபர் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் மல்லாவி கல்லூரி சாரணிய மாணவர்கள் யோகபுரம் ம.வி.சாரணிய மாணவர்கள், பாலிநகர் ம.வி. சாரணிய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் கருத்துரைகளும் மாணவர்களது கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (07)

# கிளிநொச்சியில் மணல் அகழ கட்டுப்பாடுகள் விதிப்பு

கிளிநொச்சியில் மூன்று இடங்களைத்தவிர மற்றைய இடங்களில் மணல் அகழ்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கிளி. அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற சூழல் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆற்றங்கரைகளிலிருந்து மணல் அகழ்வதால் சூழல் பாதிக்கப்படுகின்றது. ஆற்றுப் பகுதிகளில் வளரும் மரங்கள் அழிந்து வருகின்றன. இதனைத் தடுப்பதற்காக கிளிநொச்சியில் மூன்று இடங்களில் மட்டுமே ஆற்றுமணல் அகழப்பட்டு யாழ். குடாநாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## அறிவித்தல்

தென்பகுதியிலிருந்து எமது பகுதிக்குள் வியாபார நோக்கம் கருதி சிகரட் வகைகள் கொண்டு வருவதற்கு 2003.03.15 ஆம் திகதியிலிருந்து முகவர்களுக்கு மட்டுமே அனுமதிவழங்கப்படும்.

பணிப்பாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை, தமிழீழ விடுதலைப்புலிகள்.

(2990)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 11 1947



மறைவு 01 02 2003

### அமரர் திரு. ரூபரட்ணம் கருணாரட்ணம்

(கருணா ஐயா)

(கனரக வாகன இயக்குநர், தமிழீழ நிர்வாக சேவை தமிழீழம்)

கருணை பொழிமுகம் கொண்டவரே!
காணாது இருப்பது எங்ஙனமோ?
கடமை செய்யும் போதெல்லாம்
கண்ணியம் தவறா உத்தமரே!
காலம் அழைத்தது ஏனையா?
கலங்கிடத் தானோ நாமிங்கு.

ரூபரட்ணம் கருணாரட்ணம்,
தலைவர் / பொதுமுகாமையாளர் / பணியாளர்கள்
வடபிராந்திய பாரவூர்திச்சங்கம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி-3693)

# பலஸ்தீன அகதி முகாமொன்றிற்குள் இஸ்ரேலிய டாங்கிகள் புகுந்து தாக்குதல்!

## ஆறு பொதுமக்கள் பலத்த காயம்

**பலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்திலுள்ள ஹானியூலி அகதி முகாமிற்குள் ஊடுருவிய இஸ்ரேலிய டாங்கிகள் அங்கு கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தின. இதில் ஆறு பலஸ்தீன பொதுமக்கள் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.**

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றது. இஸ்ரேலிய தாக்குதலில் மக்களின் வாழ்விடங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

வீதியோரத்தில் சிறிய குண்டொன்று இஸ்ரேலிய படையினரால் கண்டெடுக்கப்பட்டமையைத் தொடர்ந்தே பொது மக்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. அகதி முகாமிற்குள் திடீரென ஊடுருவிய இஸ்ரேலிய டாங்கிகள் கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தின. மக்களின் நான்கு வாழ்விடங்களும் தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்தன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காஸா பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் நான்கு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதுடன், டாங்கி ஒன்றும் சேதமடைந்திருந்தமை தெரிந்ததே. இந்தத் தாக்குதலுக்கு பலஸ்தீன இஸ்லாமிய தீவிரவாத கமாஸ் அமைப்பு உரிமை கோரியிருந்தது.

தற்போதைய பொதுமக்கள் மீதான தாக்குதல், இஸ்ரேலிய படையினரின் பழிவாங்கும் ஒரு நடவடிக்கையென கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான தாக்குதல் அகதி முகாம் மக்களிடையே பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## மலைச்சரிவுக்குள் ரயில் வீழ்ந்து கோர விபத்து

### -14 பேர் உயிரிழப்பு

(தைப்பீ)

தாய்வானில் உல்லாசப் பயணிகளை ஏற்றிச் சென்ற ரயில் தடம் புரண்டதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏறத்தாழ 100 பயணிகளுடன் தாய்வானின் மத்திய பிரதேசத்திலுள்ள ஹலிசான் மலைப்பகுதியில் சென்று கொண்டிருந்த இந்த ரயில் திடீரென மலைச்சரிவிற்குள் வீழ்ந்துள்ளது. மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களின் தொகை அதிகரிக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டனர்.




"அபாயகரமான பொருள்" என்ற துருக்கிய வாசகத்தோடு துருக்கித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் எண்ணெய்தாங்கிக் கப்பலை வேகமாகக் கடந்து செல்லும் துருக்கியப் படைவீரர்கள்.

## அணுவாயுத தாக்குதல் நடைபெறலாம் பிரிட்டனில் எழுந்துள்ள அச்சுறுத்தல்!

(லண்டன்)

விமானத்தின் மூலம் அணுவாயுத தற்கொலைத் தாக்குதல்கள் தன்மீது நடத்தப்படலாம் என்று பிரிட்டன் அச்சம் தெரிவித்துள்ளது.

பயணிகள் விமானங்களை பயன்படுத்தி 1950களில் நடத்தப்பட்டது போன்று தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று பிரிட்டன் அஞ்சுகின்றது.

இதேவேளை இத்தகைய தாக்குதல்களைத் தவிர்ப்பது மிகவும் கடினமான விடயம் என்று பிரிட்டன் அதிகாரிகளை மேற்கோள்காட்டி லண்டனில் வெளியாகும் "சண்டே டைம்ஸ்" தெரிவிக்கின்றது. மேலும் கப்பல்கள் மூலம் அணுவாயுதங்கள் பிரிட்டனுள் கொண்டுவரப்பட்டு தாக்குதல் நடத்தப்படக் கூடிய அபாயம் இருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.



பக்தாத்தில் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர் பணியை பார்த்துக்கொண்டு நிற்கும் ஈராக்கிய தாயும், மகனும்.

## இயந்திர மனிதர்கள் செவ்வாயில் உயிரின ஆய்வு

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கிறதா? அல்லது இருந்ததா? என்பதைக் கண்டறிய இரண்டு மனித இயந்திரங்களை நாஸா ஆய்வு மையம் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி இதற்கான பயணத்தை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாஸா விஞ்ஞானிகள் இந்தப் பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். செவ்வாய்க் கிரகத்திலுள்ள பாறைகள் தரையின் ஈரப்பதன் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும் இந்த மனித இயந்திரங்கள் பூமிக்கு அனுப்பும் அத்தோடு சூழலைப் படம் பிடிப்பதற்காக இயந்திர மனிதர்களின் புகைப்படக் கருவியும் பொருத்தப்பட்டுள்ளது என நாசா விண்வெளி ஆராய்ச்சிக் கழக இயக்குனர் சாள்ஸ் கிலைச்சி தெரிவித்துள்ளார்.



தரையிறங்கும் கலம்



வடகொரியாவில் இருக்கும் தமது உறவினர்களை 50 வருடங்களுக்குப் பின் சந்தித்துவிட்டு மீண்டும் தென்கொரியா செல்ல விடைபெறும் குழுவினர்.

## ஈராக்குடனான எல்லையை ஈரான் முற்றாக மூடியது

### -துருக்கியும் தீர்மானம்

(தெஹ்ரான்)

ஈராக்குடனான எல்லையை முற்றாக மூடிவிடுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அன்று ஈரான் அதியுயர் தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தினையடுத்தே இது குறித்து முடிவெடுக்கப்பட்டதாக அரசாங்க சபைப் பேச்சாளர் அப்துல்லாஹ் ரமேஸான் ஸாடே தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னரே ஈரானிலுள்ள ஷியா முஸ்லிம்களின் புனிதமிகு வணக்கஸ்தலத்திற்கு வரும் பாதையை மூடிவிடுவதாக முடிவெடுத்திருப்பது எனக் கூறிய அப்துல்லாஹ் இது குறித்து நாட்டின் பாதுகாப்பு சபைத் தலைவரான ஜனாதிபதி முஹம்மத் காதமியின் தலைமையின் கீழ் முடிவெடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

இது தொடர்பாக ஈராக் எதுவும் அறிவிக்கவில்லை. ஈராக்குடனான எல்லையைத் துருக்கி மூடிவிடத் தீர்மானித்திருப்பதாக அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸ் - அமெரிக்க கூட்டு நடவடிக்கை சட்டப் பிரச்சினையால் தாமதம்

(மணிலா)

பிலிப்பைன்சின் தென்பகுதியில் கிளர்ச்சியாளருடன் போராட பிலிப்பைன்ஸ் படைகளுக்கு உதவுவதில் அமெரிக்கத் துருப்புக்கள் மேற்கொள்ளவேண்டிய பங்களிப்பு குறித்து இரு நாடுகளினதும் பாதுகாப்புத் தலைவர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வருவதில் தோல்வியடைந்துள்ளார்கள். இதனால் பிலிப்பைன்சில் அமெரிக்கத் துருப்புக்கள் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்தவாரம் 1750 அமெரிக்கத் துருப்புக்கள் பிலிப்பைன்சில் முஸ்லிம் பிரிவினைவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்காக அந்த நாட்டிற்குச் செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டபோது பிலிப்பைன்ஸ் படைகளுடன் அமெரிக்கத் துருப்புக்கள் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பிலிப்பைன்ஸ் அரசியல் அமைப்பு சட்டங்களின்படி வெளிநாட்டுத் துருப்புக்கள் உள்நாட்டுப் படைகளுடன் இணைந்து போராடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என பிலிப்பைன்ஸ் பாதுகாப்பமைச்சர் பென்டகனில் அமெரிக்க பாதுகாப்பமைச்சரைச் சந்தித்த போது தெரிவித்துள்ளார்.

இதனால் நான்கு வாரங்களுக்கு கூட்டு இராணுவ நடவடிக்கை தாமதம் அடையலாம் என பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்துள்ளது.

## வடகொரியா பொறுப்புடன் செயலாற்ற ஜப்பானிய பிரதமர் வலியுறுத்து

(டோக்கியோ)

வடகொரியா பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்று ஜப்பானியப் பிரதமர் ஜூனிஷிரோ கொய்ஸூமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடகொரியா ஏவுகணைப் பரிசோதனை நடத்தியதை அடுத்து எழுந்துள்ள பதற்றத்தைத் தணிக்க வடகொரியா தனது ஆபத்து மிக்க நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது என்று கொய்ஸூமி மேலும் கோரியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடகொரியா ஏவுகணை ஒன்றைப் பரிசோதித்து ஜப்பானியக் கடலில் விட்டதையடுத்து கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

வடகொரியா மீது அமெரிக்கா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால் கொரிய தீபகற்ப எல்லையில் அதன் படையினரைத் தயாராக இருக்குமாறு அந்த நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது.

# கோழிக்குஞ்சுகளுக்கு ஏற்படும் கொக்சிடியோசிஸ்

கோழிக் குஞ்சுகளை வியாபாரிகளிடம் வாங்கி வளர்ப்பவர்களும், கோழிகளில் அடைகட்டி வளர்ப்பவர்களும் கவனிக்க வேண்டியது.கோழிக் குஞ்சுகளுக்கு நோய் வராது பாதுகாப்பது முக்கியமாகும். கோழிக்குஞ்சுகளை தாக்கும் நோய்களில் முக்கியமாக தாக்கப்படும் நோய் கொக்சி யோசிஸ் நோயாகும். இந்நோய் ஏற்படுவதற்கு நுண்கல உருவான ஒட்டுண்ணி ஒன்றே காரணமாகும்.



இவ்வொட்டுண்ணிகள் உணவுக் குழாயினுள் சென்று தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் சிறு குடல்களில் வீக்கம் ஏற்படுவதோடு அவற்றினுள் இரத்தமும், சளியும் தோன்றுகின்றன. இவை படிப் படியாக மலத்துடன் வெளிவருகிறது.

தாக்கப்பட்ட குஞ்சுகளில் சாதாரண நோய் அறிகுறிகளான தூங்குதல், ஒன்றாகச் சேர்ந்து நிற்றல் போன்ற அறிகுறிகள் காணப்படுவதோடு கொக்சிடியோசிஸ் நோயென நிச்சயப் படுத்திக்கொள்ளலாம். 2-6 வாரக் குஞ்சுகளின் கழிச்சலில் இரத்தக் கறையும் காணப்படும் இச்சந் தர்ப்பத்திலே 60 வீதம் வரை இறப்பு ஏற்படும்.

சாதாரணமாக ஒட்டுண்ணிகள் மற்றொரு உயிரினத்திலே அவ்வுயிரினத் தின் உணவை உட் கொண்டு அதனுடன் ஒருங்கிணைந்து வாழ்க்கை நடத்துகிறன. எனினும் ஒட்டுண்ணிகள் அவ்வுயிரினத் துக்கு பெருமட் சேதத்தை ஏற்படுத்துமானால் இறுதியில் அவ்வுயிரினங்கள் இறப்பதோடு ஒட்டுண்ணிகள் அழிய வேண்டிய ஏற்படும். இச்சந்தர்ப்பத்திலே ஒட்டுண்ணிகளது தாக்கம் அவை இருக்கும் உயிரினங்களை அதிகம் பாதிப் பதில்லை. ஆனால் சுகாதாரமற்ற சூழலிலே பறவைகள் நோயை எதிர்க்கும் சக்தி குறைவடைவனால் ஒட்டுண்ணிகள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வேகமாகப் பெருகி பிரச்சினையை ஏற்படுத்துகின்றன.

குஞ்சுகளிலேயே இயற்கையாக இந்நோயை எதிர்க்கும் சக்தியை ஏற்படுத்திக் கொள்ள அவற்றிற்கு உணவுடன் ஒரு கொக்சிடியோஸ்ரற் மருந்தை வழங்கவும். கொக்சிடியோஸ்ரற் மருந்து கொக்சிடியோசிஸ் நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகள் பறவைகளின் உடலிலே வாழ்வதை எதிர்க்கக் கூடியதாக உள்ளன. பொதுவாக வளர்பருவக் கோழிக்குஞ்சுகளுக்கான உணவுக் கலவையிலும், கொக்சிடியோசில் நோய்க்கெதிரான மருந்தொன்றைக் கலந்து தயாரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

கொக்சிடியோசிஸ் நோய்க்கு "அம்புறோனியம்" எனும் மருந்து தற்போது உணவுக்கலவையிலேயே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்மருந்து இப்போது சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருவதாக கருதப்படுகிறது.

கொக்சிடியோசிஸ் நோயை கட்டுப்படுத்துவதனால் கைக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம் நல்ல சுகாதாரமாகும். கூடுகளில் குஞ்சுகள் நெருக்கமாக நிற்காது பரந்து ஐதாக நிற்கக்கூடியதாக போதியளவு இடவசதி வழங்குதல் அவசியம். அதனால் 100 இரண்டு வாரக் குஞ்சுகளுக்கு 25 சதுர அடியும், 3-8வாரப் பருவக் குஞ்சுகளுக்கு 50 சதுர அடியும், 9-14 வாரப் பருவக் குஞ்சுகளுக்கு 150 சதுர அடியும், அதன்பின் 250-300 சதுர அடியும் வழங்க வேண்டும்.

முடியுமானால் நாள் தோறும் சுத்தப்படுத்தக் கூடியவாறு கம்பி வலையினால் ஆன தளங்களிலே குஞ்சுகளை வளர்க்கவும். இதற்குப்பதிலாக கனகூள முறையில் வளர்க்கப்படும்போது கழிவுடன் வெளிவரும் ஒட்டுண்ணிகளின் முட்டைக்குவியல்கள் அழியக் கூடியவாறு கன கூளத்தை 2-6 அங்குலத்துக்குப் படிப்படியாக நிரப்பிக்கொண்டு வருதல் வேண்டும்.

இவ்வேளையில் கனகூளம் கோழிக்கழிச்சலுடன் சேர்த்து ஈரமான நிலையில் இருக்காது. உலர் நிலையிலேயே பாதுகாக் கப்படுவதும் அவசியம். கூளம் ஈரமாக இருக்குமானால் நோய் பரவுவதற்கு ஏதுவாக இருக்கும். கூளத்தை உலர்ந்த நிலையிலே பாதுகாப்பதோடு ஒவ்வொரு 100 சதுர அடிக்கு 10-15 இறாத்தல் சுண்ணாம்பு எனும் வீதத்தில் பிரயோகிக்கவும். அத்துடன் கூளத்தை ஒழுங்காகக் கிளறி விடவும் சுண்ணாம்பு பிரயோகிக் கப்படும்போது ஒட்டுண்ணிகளின் முட்டைகளும் குறைவாகக் கூளத்தில் காணப்படும்.

### சிகிச்சை

சில வேளைகளிலே கோழி வளர்ப்பாளர்கள் சில அசாதாரண காரணங்களினால் தங்களது பறவைகளை கொக்சிடியோசிஸ் நோய் தாக்குவதை அவதானித்தல் கூடும். இக்காரணங்களால் ஒட்டுண்ணிகளுக்கும் பறவைகளுக்கும் இடையேயுள்ள சமநிலை பாதிக்கப்படுகிறது. அதனால் பறவைகளில் இறப்பைக் கட்டுப்படுத்துவதோடு அவற்றிற்கு மற்றொரு மருந்து வழங் குவது அவசியமாகிறது. "சல்மெற்" அல்லது எம்பசின் அதனை 3-2-3 எனும் அடிப்படையிலே செலுத்துதல் வேண்டும். அதாவது 3 நாட்களுக்குக் தொடர்ந்து கொடுத்துவிட்டு பின் இரண்டு நாள் நிறுத்தி அடுத்து மூன்று நாள் தொடர்ந்து நீரில் குடிக்க கொடுக்கவேண்டும்.

**த.சிவலிங்கம்.**

# பொருண்மிய வாசல்

## அவரைக்காயின் மகிமை என்ன?

அவரைக்காய் உற்பத்தியில் கலிபோர்ணியா மாநிலம் உலகத்தில் முதலிடத்தில் இருக்கிறது. பண்டைக்காலத்தில் இருந்தே முக்கியமான காய்கறியாக அவரைக்காய் பயன்படுத்தப்படுகிறது.

ஆயுர்வேத மருத்துவம், மாவு வகையில் கெட்டியான உணவுப் பொருள் அவரைக்காய் தான் என்கிறது. மேலும் உடலுக்கு குறிர்ச்சியைத்தந்து இழந்த பலத்தை மீட்டு புத்துணர்ச்சி தரும் மருந்தாக இது பயன்படுகிறது. ரத்த நோய்களைக் குணமாக்கும் மருந்தென ஆயுர் வேதம் கூறுகிறது.

அவரையில் கொத்தவரை, பனியவரை, கராம்பவரை, சிறகவரை எனப்பல இனங்கள் இருக்கின்றன. இவற்றில் பனியவரை, கராம்பவரை, சிறகவரை என்பன கொடியாகவும், கொத்தவரை செடியாகவும் உள்ளன. இவற்றை வீட்டுத் தோட்டங் களில்பயிரிடலாம். அவரைக்காயில் புரதமும் விற்றமின் A.B.C முதலியவையும் அதிக அளவும் உள்ளன. புரதச் சத்தை விட மாப்பொருள் அதிகமாக உண்டு. இதில் கரோட்டின் சத்து அதிகளவில் இருக்கிறது. எனவே கண்பார்வை நன்கு அதிகரிக்கும். பார்வை மங்கு வதைத் தடுக்கும். அவரைக்காயைச் சமைத்து உண்ணலாம்.


அவரைக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய் மற்றும் இருதயநோய் என்பன குணமாகும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் சிறிதளவாவது உணவில் சேர்த்துக் கொள்வது மிக நல்லது.

இளைய வயதுக்காரர்களும் விளையாட்டு வீரர்களும் அவரைக் காய் பொரியலுக்கு முக்கியத் துவம் கொடுத்து உண்ணவேண்டும். உடல் வளர்ச்சிக்கு இக்காய் மிக உதவும். அவரை இன்சுலினை உற்பத்தி செய்து கொண்டிருப்பதால் நீரிழிவு நோயைக் குணப் படுத்த உதவுகிறது.

அவரைக்காயில் இரும்பு, கல்சியம், பொஸ்பரசு போன்றவையும் இதில் இருப்பதால் நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது. புரதச்சத்தும் காபோவைதரேற்றும் முறையே உடல் வளர்ச்சிக்கும், உடலுக்குத் தேவையான சக்தியையும் கொடுக்கிறது. இவை இரண்டும் அவரைக்காயில் இருப்பதால் அடிக்கடி பசி எடுக்கும். முக்கியமாக நீரிழிவு நோயாளர்களுக்கு அரிய சத்துணவாகவும், மருந்தாகவும் இது பயன்படுகிறது. ஆகவே விவசாயிகள் இப்போது அவரைக்காயின் மகத்துவத்தினை அறிந்திருந்திருப்பீர்கள் அல்லவா. உங்கள் வீட்டுத் தோட்டங்களில் தவறாது அவரைப்பயிரை நாட்டி பயன் அடையலாம் என நம்பப் படுகிறது.

**சிவகமலா**

## பொருண்மிய பொன்னம்பலத்தார்



நான் பாருங்கோ உதில கிளிநொச்சியிலை காரரளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்துக்கு போட்டு வருவமெண்டு வெளிக்கிட்டனான். என்னெண்டால் பாருங்கோ, என்ரை பட்டியில நிற்கிற பசுவொண்டுக்கு செயற்கை முறை சினைப்படுத்தல் செய்யப் போறன். ஏனெண்டால் பாருங்கோ, செயற்கைமுறை சினைப்படுத்தலிலை பல நன்மையள் இருக்குது. என்னெண்டால் நல்ல இன கன்று கிடைக்கும் பாருங்கோ, எனிவாற காலத்தில அதிக பால் கறக்கிற இனமாக வரும். மற்றது கருச்சிதைவு ஏற்படாது. வலு நம்பிக்கையான ஒரு முறை. அதாலை தான் பாருங்கோ நான் என்ரை பசுமாட்டுக்கு செயற்கை முறை சினைப்படுத்தல் செய்ய முடிவெடுத்தனான். நீங்களும் இதைச் செய்யலாம். உங்கட பசு வேட்கை காட்டத் தொடங்கின உடனையே செயற்கை முறைச் சினைப் படுத்தல் நிலையத்திலை தெரியப்படுத்த வேணும். உத்தியோ கத்தர் வீட்டை வந்து செயற்கை முறை சினைப் படுத்தல் செய்வார். சிரமம் இல்லை . நாங்கள் பெரிய பட்டிவைச்சு பால் கறந்தாலும் கிடைக்காத அதிக பால யாழ்ப்பாணத்திலை ஒரு நல்ல இனப்பசு வளர்த்து அதிக பால் கறக்குதுகள். நீங்களும் நல்ல இனத்தை செயற்கை முறை சினைப்படுத்தலிலை உருவாக்கினீங்கள் எண்டால் அதிக பால் கிடைக்கும் எதிர்காலம். சிறக்கும். சரி... சரி நேரம் போகுது நான் போட்டோடி வாறன்.

# மாடுகளைத் தாக்கும் கோமாரி நோய்

மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோயானது, வைரஸ் என்று சொல்லக்கூடிய ஒருவித நச்சு விதத்தால் பரவக் கூடியது. இந்த நோயானது மிக விரைவாகவும், கூடிய தூரம் குறுகிய காலத்தில் மிகவேகமாகப் பரவக் கூடிய ஒன்றாகும். காற்று வழியாக இந்த வியாதி பரவக்கூடிய சாத்தியம் உண்டு. இந்த நோய் இரண்டு காலங்களிலும் பரவும். அதாவது ஒக்டோபர், நவம்பர் போன்ற மாதங்களிலும் யூலை ஆகஸ்ட் போன்ற மாதங்களிலும் பரவும்.

ஆடுகளுக்கு இந்நோய் தாக்கம் குறைவு. அதேபோன்று பன்றிகளையும் தாக்கும். மாடுகளைப் பொறுத்தவரையில் இளங்கன்றுகளுக்கு அதிகம் ஏற்படும்.

இந்நோய் கால்நடைகளுக்கு ஏற்பட்டால் அவற்றில் சில அறிகுறிகள் தென்படும். அவை யாவன முக்கியமாக கால்நடைகளில் பாலின் அளவு குறையும். அடுத்து கால்நடைகளுக்குக் காய்ச்சல் ஏற்படும். இதனால் துப்பரவாக தீவனம் உட்கொள்ள மாட்டாது. வாயினில் கொப்பளங்கள் தோன்றும். இந்தப் கொப்பளங்கள் உடைத்துப் புண் உருவாகும். இதனால் கால்நடைகள் நடக்க முடியாமல் காணப்படும். இதன் பின் அசைபோட முடியாமல் போகும்.

இந்நோய் தொற்றுவியாதியாகக் காணப்படுகின்றது. அத்தோடு காற்றினாலும் பரவலாம். அதாவது தொற்றுநோய் என்றால் பொதுவாக தெள்ளுகளாலும், உண்ணிகளாலும் பரவும். இந்நோய் கூடுதலாக வாயிலும், காலிலும் தான் அனேகமாக உண்டாகும். இந்நோய் வராமல் இருப்பதற்கு ஒரேஒரு வழி கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்குவதுதான். ஒரு வருடத்தில் இரண்டுமுறை போட வேண்டும். இந்நோய்த் தாக்கம் குறைந்துகொண்டு போனபின் இதற்கென தனியாகத் தடுப்பூசி பாவிக்கப்படுகிறது. பொதுவாக இந்நோய் ஏற்பட்டால் 3 மாதங்களுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு போடலாம். தடுப்பூசியை பாவித்தாலும் சிலவேளைகளில் இந்நோய் பரவும் தன்மை காணப்படுகின்றது. இதற்கான காரணமாவது, இந்த நோய் ஐந்து உருவத்தில் வருகின்றது.

1) SAT.01 2) SAT.02
3) SAT.03 4) A A P.
5) ஏசியன்01

இந்தக் கோமாரி நோயை வாயில் காணப்படும் கொப்பளத்தை குறைக்க வேண்டும் என்றால் வாயில் உள்ளவற்றுக்கு பொட்டாசியம் பரமங்கனேற் தண்ணீரில் விட்டு கலந்து பின் அந்த இடத்தில் இதனால் கழுவிவிட்டு பின்னர் காலிலிருக்கும் புண்களுக்கும் இதனைப் பாவிக்கலாம். பாதிக்கப்பட்ட மாடுகளையும் நோயற்ற மாடுகளையும் தனித்தனியாகப் பராமரிக்க வேண்டும். பொதுவாக கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றால் முதலில் அதன் பராமரிப்பு அவசியமாகக் கொள்ளல் வேண்டும். வேறு ஏதாவது நோய் ஏற்பட்டால் உடனடியாக கால்நடை வைத்தியரின் உதவியை நாடி அதற்கான தடுப்பூசிகளையும், மருந்துகளையும் ஏற்றி முற்றாக இந்நோய்களை தடுக்கலாம்.

**சி.ந்தி**

# சாதனைகளைச் சாதிக்க விரும்புகின்றீர்களா?

உண்மை, நேர்மை, ஒழுங்கு, நல்லெண்ணம், உதவி என்பவை நம் வாழ்வின் அடிப்படைகள்.

இவை கைவரப்பெற்ற நாம் வாழ்வில் வெற்றிகாண விரும்புகிறோம். சாதனைகளைச் சாதிக்க விரும்புகிறோம். வாழ்வில் நாம் விரும்பிய நல்லவைகளை எல்லாம் அடைய ஆசைப்படுகிறோம்.

அவ்வாறு வெற்றிக்கு ஒரு வழி, சாதனைக்கு ஒரு பாதை இருக்கின்றது. இதைப் புரிந்துகொண்டால் எதையும் சாதிக்க முடியும் என்று டேவிட் மெக்கிளல்லண்ட் என்ற பேராசிரியர் சொல்கிறார்.

எல்லோருடைய மனதிலும் வெற்றி பெறவேண்டும் என்கிற உந்துதல் கூடுதலாகவோ அன்றி குறைவாகவோ இருக்கின்றது. அதைச் சோதித்து நிலைமையை அறிந்து கொள்ள முடியும். பிறகு அந்த வெற்றிபெறும் ஆர்வத்தை அதிகமாக்க முடியும் என்கிறார் அவர்.

மாணவர்கள் பரீட்சைக்குப் படிக்கின்றார்கள், இன்ன கேள்விக்கு இன்னதுதான் பதில் என்று தெரிந்து கொண்டு படிக்க ஆரம்பித்தால் நிறைய மதிப்பெண்களைப் பெறமுடியும் அல்லவா?

வாழ்வில் எப்படி வெற்றி பெறுவது, சாதனை புரிவது என்பது,எதை நோக்கினும் அதை வெற்றிகாணும் மனோபாவத்துடனே பார்ப்பதுதான் அதன் அடிப்படை.

*

நூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஜேம்ஸ் ஆலன் என்ற தத்துவஞானி "நாம் மனதிற் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கு ஏற்ப நம் சூழ்நிலை அமைகின்றது. நாம் எந்தச் சூழ்நிலையை, வெற்றியை விரும்புகிறோமோ அதற்கேற்ப எண்ணங்களைச் சீரமைத்துக் கொண்டால் வாழ்வு நாம் விரும்புகின்றபடி அமையும்" என்றார்.

"முதலில் உன் எண்ணங்களைச் சீரமைத்துக் கொள். எதையுமே வெற்றி மனோபாவத்துடன் பார். முன்னேற்றக் கண் கொண்டுபார். இதையே ஒரு பழக்கமாக்கு" என்கிறார் மெக்கிளல்லண்ட்.

எதையுமே வெற்றிக் கண்களோடு பார்ப்பதை ஒரு பழக்கமாக்க வேண்டும். அதாவது, கற்பனை செய். வெற்றி காண்பதாகக் கற்பனை செய்.

நீ இன்று பள்ளி மாணவனாக இருக்கின்றாய். உனக்குத் தேவை நிறைய மதிப்பெண்கள் பெற்றுச் சிறந்த மாணவனாக வருவது. எதை அகக் கண்ணில் பார்க்கின்றோமோ அது புற உலகில் நிச்சயமாக நிகழும் என்பதுதான் உண்மையானது.

இரண்டாவதாக எதிலும் பொறுப்பை நாடுங்கள். உதாரணமாக பள்ளியில் பிற மாணவர்களைக் கட்டுப்படுத்தும் ஓர் உதவியாளனாக ஆசிரியர் உங்களைப் போட்டிருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் உங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. பெருமை இருக்கின்றது. சாதனை இருக்கின்றது. இப்படிப்பட்ட பொறுப்புமிக்க விடயங்களை நாடுங்கள்.

ஒரு மலையைப் பார்க்கிறீர்கள். ஏற முடியாது என்று சிலர் சொல்கின்றார்கள். நீங்கள் ஏற முயலுங்கள். சவால்களை ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் நம் திறமை நமக்கே தெரியும். நம்மைப் பற்றி நாமே மகிழ்வோம்.

வாழ்க்கையைப் பார்த்தால் அதில் பெரிய திருப்புமுனைகள் என்று சொல்லக்கூடிய சம்பவங்கள் ஓரிரண்டு தரம் வரும். நீங்கள் எங்கே வேலையில் அமர்கிறீர்கள். எந்தத் துறையில் தொடர்ந்து பணிபுரிந்து சாதனை புரிந்தீர்கள் என்று வாழ்வில் திருப்பு முனைகள் சிலவேதாம்.

ஆனால், வாழ்வு என்பது பல்வேறு சிறுசிறு செயல்களால், சம்பவங்களால் நாம் எடுக்கும் முடிவுகளால் உருவாகின்றது.

எனவே, அந்தச் சிறுசிறு காரியங்களைச் செய்து முடிக்கும் போது ஏற்படும் சிறுசிறு வெற்றிகள் தாம் வாழ்வை அன்றாடம் மகிழ்ச்சிகரமாக ஆக்கும்.

மூன்றாவதாக நாம் அடையும் சிறு சிறு வெற்றிகள் நம்மால் முடியும் என்ற நம்பிக்கையை நம்மிடம் வலுப்படுத்தும். நமது மகிழ்வை அதிகப்படுத்தும்.

வெற்றி ஏற்படும் போது நமக்கு இன்னும் அதேபோல நிறைய வெற்றிகளை அடைய வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகின்றது.

உங்கள் இலட்சியத்தை நோக்கிய சிறுசிறு விடயங்களை எடுத்துக் கொண்டு சாதியுங்கள்.

சிறு குழந்தைகள் பெரியவர்களைப் போல் எல்லாம் செய்வார்கள் என்று எதிர் பார்க்காதீர்கள். அவர்கள் வெற்றி யடையக்கூடிய சிறுசிறு கணக்குகளை, செயல்களைச் செய்யச் சொல்லுங்கள். சிறுசிறு வெற்றிகள் குழந்தைகளுக்குத் தங்களைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கின்றன.

கடைசியாக நமக்கு வழிகாட்டுபவர்கள் தேவை. வெற்றியடைந்தவர்களுடன் பேசுங்கள். ஆலோசனை கேளுங்கள். வரலாற்றிலே எத்தனையோ மகான்கள், எத்தனையோ தலைவர்கள், எத்தனையோ கவிஞர்கள், எத்தனையோ தொழிலதிபர்கள் அவர்களை நீங்கள் உங்கள் துறைக்கேற்ப முன் மாதிரியாகக் கொள்ளுங்கள். ஊக்கம் தரும் அவர்களது வீர வரலாறுகளைப் படியுங்கள். இதன் மூலம் அதேபோன்ற வீர எண்ணங்கள் நம்மனதில் மலரும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கை பிறக்கும்.

மேலே குறிப்பிட்ட 4 வழி முறைகளையும் எண்ணிப் பார்த்தால் இது ஒரு மனப்பயிற்சி என்பது தெரிய வரும். எண்ணங்களை ஒரு குறிப்பிட்ட வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் வழிமுறை இங்கே விளக்கப்பட்டிருக்கின்றது.

அதனால்தான் சுவாமி விவேகானந்தர் "ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதேயே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி" என்று சொன்னார்.

**தேவி**

## பல்பாடநூல் தேர்வு முறைமை

மாணவர்களுக்கு இன்றுவரை அரசாங்கம் வழங்கும் இலவசப் பாடப்புத்தகங்களே மாணவர்கள் கற்கும் புத்தகங்களாக இருக்கின்றன. இம்முறையால் விரும்பிக் கற்கும் மாணவர்களுக்கு வேறோர் வழியும் தெரியாது உள்ளது. இதனைத் தவிர்க்கும் முறையில் தேசிய கல்வி நிறுவனமும், உலக வங்கியும் இணைந்து 2004ஆம் ஆண்டு முதல் பல்பாட நூல் தேர்வுக் கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

இம்முறையானது அரசு வழங்கும் இலவசப் பாடநூல் இலவசமாகவே வழங்கப்படுவதோடு, தனியார் துறையினர் போட்டிச் சந்தை மூலம் படைக்கப்படும் 3 புத்தகங்களும் விரும்பித் தேர்வு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் காரணமாக புத்தகச் சந்தையில் நிறை போட்டி உடையதாகவும், நல்ல முகாமைத்துவத்தின் கீழ் சிறந்த படைப்புக்கள் வெளிவர வழிகோலும். பொது வேலைத் திட்டத்தில் பல் பாட நூல் தேர்வு முறைமை பற்றிய எல்லா வேலைத்திட்டங்களும் நிறைவேறிவிட்டதாகவும் இதனால் ஏற்படக்கூடிய நன்மைகளும் பரிந்துரைக்கப்பட்டன.

## வாழ்வின் முன்னேற்றம் உங்கள் கையில்...

வாழ்வின் முன்னேற்றமானது மாணவப் பருவத்திலேயே ஆரம்பிக்கிறது. அடியத்திவாரம் பலமாக இருந்தால் மட்டுமே கட்டடம் நெடுநாட்களிற்கு நீண்டு நிலைத்திருக்கும். மாணவப் பருவத்திலேயே சோம்பேறியாகத் திரியாது நற்பண்புகளுடன் கூடிய எமது அறிவைப் பல வழிகளிலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பறவைகளைப் பாருங்கள். அவை எப்போதும் சோம்பேறியாக இருந்ததில்லை. தன் உணவைத்தானே தேடிக் கொள்கிறது.தனக்குக் கூடும் கட்டிக் கொள்கிறது.தன் கூட்டினை தனது சிறிய அலகுகளாலும், கால்களாலும், சிறுசிறு முட்களையும்,புற்களையும் சளைக்காமல் சுமந்து வந்து கூட்டைக் கட்டுகிறது. குருவிகளே இவ்வாறு செய்யும் போது மனிதர்களாகிய நாம் வாழ்வதற்கு எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைச் சொல்லித் தெரிவதில்லை.

காலம் பொன்னானது அதனை வீணாகக் கழிப்பது மடமை. படிக்கும் நேரத்தில் விளையாடி விட்டுப் பரீட்சை நேரத்தில் தவிப்பது முட்டாள்தனம்.

இன்றே செய், நன்றே செய் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாளை என்பது இல்லை என்பதற்கு அடையாளம் என்பார்கள்.நாளை, நாளை என்று வாழ்நாளையே பலர் கழித்து விட்டிருக்கிறார்கள். இளமை போய் முதுமை வந்த போது இளமைக் காலத்தில் படிக்காததை எண்ணிக் கலங்குவதில் என்ன பயன்?

நன்கு படித்து பல அனுபவங்களைத் தேடிச் சென்று பல பெரிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு செயற்படுபவரிற்குத் தான் அறிவும் வளர்ந்து வரும்.

மேலும் உலகில் எப் படியும் வாழலாம் என்று நினைத்து வாழ்பவர்கள் வாழ் வதில் உள்ள சுகம் தான் என்ன? இப்படித்தான் வாழ வேண்டும், என நினைத்துக் கொண்டு அதற்கேற்ப சிறுவயதிலிருந்தே வாழ்ந்து பாருங்கள். உங்கள் வாழ்க்கை இன்பகரமாக இருக் கும்.

அத்தோடு பொய் சொல்லக் கூடாது,பிறரை வஞ்சிக்கக் கூடாது,நாணயக் குறைவாக நேர்மைக்கு மாறாக செயற்படக் கூடாது என்பன பொதுவான ஒழுக்க நெறி முறைகளிற் சில வாகும்.

இப் பொது ஒழுக்க விதி கள் மாணவர்களிலிருந்து எல்லோருக்கும் பொதுவானது.

## ஈ·ராக் மீதான போருக்கு எதிராக
## கொழும்பில் 10 லட்சம் கையெழுத்து

### அமெ. தூதுவரிடம் கையளிக்க ஏற்பாடு

ஈராக் மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் 10 லட்சம் கையெழுத்து வேட்டை கடந்த வெள்ளியன்று கொழும் பிலுள்ள பள்ளிவாசல்களில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை மீறும் வகையில் அமெரிக்கா செயற்படுவதை கண்டிப்பதே இந்தக் கையெழுத்து வேட்டையின் குறிக்கோள் என மேல்மாகாண ஆளுநர் கூறியுள்ளார். திரட்டப்படும் கையெழுத்துப் பதிவுகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு அமெரிக்க சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் இலவச கணனிப் பயிற்சித்திட்டம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவால் நடாத்தப்படும் 2003 ஆம் ஆண்டுக்கான இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தொடங்கப்படவுள்ளன. இப் பயிற்சித்திட்டத்தின் கீழ் **Ms Word, Ms Excel** ஆகிய வழமையான இரு பாடநெறி களுடன் கணனித் தட்டெழுத்துப் பயிற்சியும் புதிய பாடநெறியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

உயர்கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் இப்பயிற்சித் திட்டத்திற்கு தனித்தனி 50 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலையை விட்டு வெளியேறிய சகல வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தினைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம். இன்று காலை 10.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் 'இப்பயிற்சி நெறிக்கு விணணப்பிக்கலாம்.

# கனரக வாகனங்களின் பயன்பாட்டால் திருத்தப்படாத வீதிகள் மோசமாகப் பாதிப்பு

## துரித நடவடிக்கைக்கு மக்கள் கோரிக்கை

**வீதித் திருத்தப் பணிக்காக கிரவல் ஏற்றிச் செல்லும் கனரக வானங்களால் ஓரளவுக்கு நல்ல நிலையில் இருந்த வீதிகள் கூட, பாரிய சேதத்துக்குள்ளாகி வருகின்றமையால் மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.**

பரந்தன் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியின் திருத்தப் பணிகளுக்காக இரணைமடு குளத்தை அண்டிய காட்டுப் பகுதியிலிருந்து கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு பாரிய கனரக வானகங்களில் தினமும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கை வீதிகளை மோசமாக பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

நீண்ட காலமாகப் போதிய கவனிப்பாரற்றுக் கிடக்கும் வீதிகள் ஏற்கனவே போக்குவரத்துக்கு ஏற்றவையாக இருக்கவில்லை என்பது தெரிந்ததே. இவை புனரமைக்கப்படாத நிலையில் கனரக வாகனங்கள் இவ் வீதிகளில் பாவிக்கப்படுவதானது முற்றிலும் உகந்த செயலாக இருக்கக்கூடியதல்ல.

இந்நிலையில் வீதிகளின் நிலையினைக்கருத்திலெடுக்காது மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளால் மக்கள் கவலையும், பெரும் விசனமும் அடைந்து காணப்படுகின்றனர்.

குறிப்பாக மேற்படி வீதித் திருத்தப் பணிக்காக கிரவல் ஏற்றிச் செல்லும் கனரக வானங்கள் பழைய கண்டி வீதி வழியாகவும், அதனோடு இணைந்த வீதி வழியாகவும் பயணத்தை மேற்கொள்கின்றன. இந்த வீதி தற்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கிரவல் மண் போடப்பட்டு,பொதுமக்களின் சாதாரணபாவனையில் முன்னர் இருந்த நிலையில், தற்போது கிரவல் மண் இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. பாரிய பள்ளங்களும் மணல் நிறைந்த வீதியாகவும் இது காணப்படுகின்றது. அத்தோடு, இவ்வீதியால் செல்லும் பயணிகளும், அயற்புறங்களில் இருக்கும் மக்களும் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, கனரக வாகனங்களால் பயன்படுத்தப்படும் வீதிகளை புனரமைத்து அதன் பின் தமது பணியை மேற்கொண்டால் என்ன? என மக்கள் கேள்வி எழுப்பும் அதேவேளை, சம்பந்தப்பட்டோர் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சியளிக்கத் திட்டம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிற்கு இந்த வருடம் விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வடக்கு- கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்த வருடமும் யாழ். குடாநாட்டில் இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக யாழ். கச்சேரி தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

# டிப்ளோமா பெற்றோர் விண்ணப்பிக்கக் கோரிக்கை

(வவுனியா செய்தியாளர்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்று கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள சகல தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் 1995 /1997 ஆம் கல்வி ஆண்டு முதல்1998/2000 ஆம் கல்வி ஆண்டு வரையான காலப்பகுதிகளில் ஆசிரியப் பயிற்சி பெற்று கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கே எதிர்வரும் மே மாதம் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் மேற்குறிப்பிடப்பட்ட காலங்களில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்கள் தமது சுய முகவரி இடப்பட்ட ரூபா4.50 பெறுமதியான 23CmX 10 Cm அளவிலான கடிதவுறை ஒன்றினை "பீடாதிபதி, தேசிய கல்வியியற்கல்லூரி, வவுனியா" என்ற முகவரிக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் கேட்டுள்ளார். (10)

# கொடுப்பனவு வழங்குவதில் கிராம சேவையாளர் மோசடி!

## அரச அதிபர் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், கிராம உத்தியோகத்தர்கள் புனர்வாழ்வுக் கொடுப்பனவு வழங்குதலில் ஊழல், மோசடிகள் புரிந்ததாகவும், கொடுப்பனவுகள் உரியவர்களுக்குச் சென்றடையவில்லை என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். மோன குருசாமி கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் கிராம உத்தியோகத்தர்கள் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மட்டு. மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் கொடுப்பனவுகளில் ஊழல், மோசடி என்பதை வன்மையாகக் கண்டிப்பதாக சம்மேளனம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்க அதிபரை மேற்கோள்காட்டி வெளியான மேற்படி தகவல்களால் பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.


## 15 ஆம் ஆண்டு நினைவில்.....



| | |
|---|---|
| முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி | முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி |
| லெப். கேணல் | லெப்.கேணல் |

## இம்ரான் பாண்டியன்

| | |
|---|---|
| சங்கரப்பிள்ளை சதானந்தன் | செல்லத்துரை சிறிதரன் |
| பாண்டியன் வீதி, (பிரம்படிலேன்) கொக்குவில், யாழ். | பாண்டியன் வீதி (பிரம்படிலேன்) கொக்குவில், யாழ். |

20 ❖ 01 ❖ 1962 மலர்வு 23 ❖ 03 ❖ 1960
03 ❖ 03 ❖ 1988 வீரச்சாவு 09 ❖ 01 ❖ 1988

சிங்களப்படை சிதையுண்ட காலம்
இந்தியப்படை வல்லமை காட்டிய நேரம்
வல்லரசின் வலுவுடைத்தவர்கள்
வரிப்புலி வீரன் மரபு காத்தவர்கள்.
தலைவனின் நெஞ்சில் நிறைந்தவர்கள்.
இம்ரான், பாண்டியன் நாமம் கொண்டவர்கள்.
வீரமே! உங்கள் ஒளி என்றும் வழி காட்டும்-அதுவே
உங்கள் கனவை நனவாக்கும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்-எம்
நெஞ்சை விட்டு உங்கள் நினைவுகள் நீங்காது.

த.மு:
ஆவடி, உடையார்கட்டு. (2738) குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 11 1947



மறைவு 01 02 2003

### அமரர் திரு. ரூபரட்ணம் கருணாரட்ணம்

(கருணா ஐயா)

(கனரக வாகன இயக்குநர், தமிழீழ நிர்வாக சேவை தமிழீழம்)

கருணை பொழிமுகம் கொண்டவரே!
காணாது இருப்பது எங்ஙனமோ?
கடமை செய்யும் போதெல்லாம்
கண்ணியம் தவறா உத்தமரே!
காலம் அழைத்தது ஏனையா?
கலங்கிடத் தானோ நாமிங்கு.

போராளிகள், பணியாளர்கள்,
தமிழீழ நிர்வாக சேவை,
தமிழீழம்.

(சி-7692)



## சிந்தனைக்கு

கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல் அனைத்துத் துறைகளிலுமே வளர வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-03-2003

# நடு நிலைமையல்ல!

"யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்களைக் கையாள்வது சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியாக இருப்பதே பொருத்தமானது" என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதே. அவ்வாறு இல்லாது போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை சிறிலங்காவின் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதை நீதிமன்ற விவகாரம் என அனுமதிப்பதும், போர் நிறுத்த மீறல்களில் ஈடுபடும் சிறிலங்கா ஆயுதப் படையினரை விடுதலைப் புலிகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதை யுத்த நிறுத்த மீறல் போன்ற நிலையைத் தோற்றுவிக்க முனைவதும் நடுநிலையானதொரு செயற்பாடாக இருக்கமுடியாது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையிலான வரையறைகளை யார் மீறினும் அவர்கள் போர் நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றன என்பதே சரியானதாகும். இக்குற்றச்சாட்டிற்கு அரச படை தரப்பினர் என்பதற்கு ஒரு அளவுகோலும், விடுதலைப் புலிகள் என்பதற்கு ஒரு அளவு கோலும் வைத்தல் என்பது சாத்தியப்பாடானதும் அல்ல, நடு நிலையானதாகவும் இருக்க முடியாது.

இலங்கைத்தீவில் சிறிலங்கா ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டில் ஒரு பிரதேசம் இருப்பது போன்று, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதும் உண்டு. சிறிலங்கா அரசாங்கம் சட்டம், ஒழுங்கைப் பேணுவது போன்று விடுதலைப் புலிகளும் தமது கட்டுபாட்டுப் பகுதியில் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கென காவல்துறையும், நீதித்துறையும் நடைமுறைகளைக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், சட்டம், ஒழுங்கை மீறுபவர்கள் சிறிலங்காவில் எவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனரோ அதே போன்று, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் சட்டம், ஒழுங்கை மீறுகின்றவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதனால், யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடும் விடுதலைப் புலிகள் மீது சிறிலங்கா அரசாங்கம் தமது பிரதேச சட்ட திட்டங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்படுமானால், விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த மீறல்களைத் தமது பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள சட்ட நடவடிக்கைகளுக்கும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் உட்படுத்துவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுபவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துதல் என்பது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதாக இருப்பின் அது சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும் சரி, விடுதலைப் புலிகளுக்கும் சரி ஒன்றானதாகவே இருக்க முடியும். அதாவது, சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பிற்கு ஒரு நீதியாகவும், விடுதலைப் புலிகளுக்கு ஒரு நீதியாகவும் இருக்க முடியாது.

ஆகையினால், சிறிலங்கா அரசாங்கத் தரப்பு யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டதாக விடுதலைப்புலிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அனுமதிப்பதும், விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்ட சிறிலங்கா படைத் தரப்பின் மீது நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அதனை யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானது என்பது போன்று சாதிக்க விளைவதும் பாரபட்சமானதும், நடுநிலையற்றதுமான செயற்பாடாகும்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு, யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடும் ஆயுதப் படையினரை விடுதலைப் புலிகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துதல் கூடாது என்றதொரு நிலைப்பாட்டை மேற்கொள்ளவும், அவ்விவகாரத்தைக் கையாளவும் விளைவதாயின், யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை, அரசாங்கம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துதல் கூடாது என்ற நிலைப்பாட்டையும், அவ்விவகாரத்தைக் கையாள முற்படுதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது ஒரு தரப்பாக அரச படையினரின் விவகாரத்தைக் கையாள முற்படுவதானது நடுநிலையான செயற்பாடாகக் கொள்ளத்தக்கதல்ல. விடுதலைப் புலிகளும்-சிறிலங்கா அரசாங்கமும் சம நிலையில் இருந்தே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதோடு, சமாதானப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஒரு தரப்பிற்கு ஒரு நீதி என்ற ரீதியில் சிந்திப்பதும், தீர்மானங்களை மேற்கொள்வதும், நடைமுறைப்படுத்த விளைவதும் எவராக இருப்பினும்கூட அது ஒரு நடு நிலையான, நீதியான செயற்பாடாக இருக்க முடியாது.

# சிறிலங்கா கடற்படையின் தாக்குதலால் சாவற்கட்டில் 80 குடும்பஸ்தர் உயிரிழப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக குடும்பத் தலைவரை இழந்து அல்லற்படும் சாவற்கட்டு மீனவக் கிராமத்தைச் சேர்ந்த விதவைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கு நிதி உதவி வழங்குமாறு வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் எஸ். ரமேஸ், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி உதவியாளர் இது தொடர்பாக அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

கடந்த போர்க் காலச் சூழ்நிலையில் கடற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக தொழிலில் ஈடுபட்டிருந்த சாவற்கட்டைச் சேர்ந்த சுமார் 80 குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.இதனால், விதவைகளாக்கப் பட்ட இவர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் போஷாக்கின்மையால் மிகவும் நோய் வாய்ப்பட்டுள்ளார்கள்.

எனவே, விதவைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், பிள்ளைகளுக்கு போஷாக்குணவு வழங்குவதற்கும் நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

மேலும், யாழ். மாவட்டத்தில் பல்வேறு பொது அமைப்புக்கள் இருந்தபோதும் இவர்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்க எவரும் முன்வரவில்லை.

# அரசு எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம்கொடுக்க தயாராகவுள்ளோம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர்கொள்ளும் எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்க தயாராக இருப்பதாக அரசாங்க சேவைகள் தேசிய வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த தேசிய வர்த்தக சம்மேளனத்தில் 62 முக்கிய அரச துறை நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

இந்த நிறுவனங்களின் சம்மேளனம் மேற்கண்ட முடிவை எடுத்து அரசுக்கு அதைத் தெரியப் படுத்தியுள்ளது.

## 1இலட்சம் ஏக்கரில் இறப்பர் நடுகை

(கொழும்பு)

அமெரிக்க நிதி உதவித் திட்டத்தின் கீழ், மொனறாகல மாவட்டத்தில் இவ்வருடம் ஒரு இலட்சம் ஏக்கரில் இறப்பர் நடுகை வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்விசேட வேலைத்திட்டத்திற்கு 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தின் பயனாக 50,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் படும் என்று கூறப்படுகிறது.

பயிர்ச் செய்கைக்குட்படுத் தப்படும் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஒரு லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படுமென மொனறாகல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், உல்லாசத்துறை அபிவிருத்தி அமைச்சருமான ஆர்-எம் ரன்ஜித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

## வலயக் கல்விப் பணிமனைகளை கண்காணிக்க குழு அமைப்பு

வலயக் கல்விப் பணிமனைகளின் செயற்பாடுகளைக் கண்காணிக்க வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்திலும் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு விஜயம் மேற்கொண்டு கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அவ்வலயப் பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளின் குறைகளையும் நீக்குவதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடவுள்ளது.

## அடையாள அட்டை வழங்கல் தனியாரிடம் விட ஆலோசனை

அடையாள அட்டை தயாரிக்கும் பணியை தனியார் துறையிடம் வழங்குவது குறித்து உள்துறை அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடையாள அட்டையை நவீனமயப்படுத்தி துரிதமாக விநியோகிக்கும் நோக்குடனேயே இவ்வாறு தனியார் துறையிடம் அடையாள அட்டை தயாரிக்கும் பொறுப்புக்களை வழங்கத் திட்டமிட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் விஜய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# தேசிய கூட்டணிக்கான ஒப்பந்தப் பத்திரம் ஜே.வி.பி. யிடம் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ.ல.சு. கட்சி- ஜே.வி.பி உத்தேச தேசிய கூட்டணிக்கான ஒப்பந்தப் பத்திரத்தை வரும் 4ம் திகதி ஜே.வி.பி யிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக பொ.ஜ.மு யின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந் நாட்களில் தயார் செய்யப்பட்டுள்ள மேற்படி பத்திரம் ஜே.வி.பி யிடம் கையளிக்கப்பட்டு தேவையாயின் மாற்றம் செய்வது பற்றி 4ம் திகதி ஆராயப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகம் தெரிவித்துள்ளது.

அரசு-புலிகள் ஒப்பந்தத்திற்கு எதிராகக் கூட்டணி அமைப்பது சிக்கலைத் தோற்றுவிக்காதா என பத்திரிகையாளர் கேட்டபோது விடுதலைப் புலிகளுக்கு அல்ல, பேச்சுக்களுக்கே எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என அமுனுகம கூறியுள்ளார்.

இக் கூட்டணி ஒப்பந்தத்திற்கு பௌசி உள்ளிட்ட ஸ்ரீ.ல.சு.க யின் ஒரு பகுதியினர் எதிர்ப்புக் காட்டுகின்றனர் எனக் கேட்ட போது அதற்கு இல்லை எனக் மறுப்புத்தெரி வித்தார்.

பொ.ஜ.மு ஆட்சியின் போது ஹக்கீமை நீக்கினால் ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுத் தருவதாக பௌசி கூறியது பற்றி பத்திரிகையாளர் கேட்ட போது, பௌசி அதை மறுத்திருந்தால் அது பற்றி ஒன்றும் செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அழிந்துபோகும் நிலையில் பறவைகள் சரணாலயம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள பறவைகள் சரணாலயம் பாதுகாக்கப்படாமல் கவனிப்பாரற்று அழிந்துபோகும் நிலையில் உள்ளது. இச் சரணாலயம் வண்ணங்குளம்- நித்திய வெட்டை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான நிலப்பரப்பையும் நீர்ப் பரப்பையும் கொண்டபகுதியாகும்.

வடக்கு எல்லையாக பெருங் கடலும் தெற்கு எல்லையாக கொம்படி ஊரியான் சிறுகடலும் உள்ளது.

இச்சரணாலயம் ஆங்கிலேயர் காலத்தில் மிகவும் பாதுகாக்கப் பட்டது என்றும். இங்குபல விதமான வெளிநாட்டுப் பறவைகள் தங் கிச் செல்வது வழமை என்றும் வடகீழ் பருவக்காற்று ஆரம்பித்து சில வாரங்களில் இவை வரும் எனவும், பின் தென்மேல் பருவக்காற்று ஆரம்பமாவதற்கு முன்திரும்பிச் சென்றுவிடும் என்றும் இங்குள்ள வயோதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசம் கடந்தபல வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்ததால் மரங்கள் தறிக்கப்பட்டும் குளங்கள் கவனிப்பாரற்று திருத்தப்படாமலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## பொலிஸ் நிலையங்களில் தமிழில் பதிவு செய்ய வலியுறுத்து

(கொழும்பு)

சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழர்களின் முறைப்பாடுகளைதமிழ் மொழியில் பதிவு செய்து முறைப்பாட்டாளர்களின் கையொப்பத்தைப் பெறுவதுடன்.ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழியிலேயே முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகளுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும் தொழில் வாய்ப்பு அமைச்சருமான மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

# சமாதான முயற்சிகளுக்கு தாய்லாந்து தன்னாலான உதவிகளை வழங்கும்!

## கிளிநொச்சியில் தாய்லாந்துத் தூதுவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு தாய்லாந்து அரசாங்கம் தன்னாலான ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் வழங்கிக்கொண்டிருக்கும் என சிறிலங்காவுக்கான தாய்லாந்துத் தூதுவர் ஜேம் ரொயினன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளருடன் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் பின் செய்தியாளர்களுக்கு கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



நேற்று வன்னிக்கு வருகைதந்திருந்த தாய்லாந்து தூதுவர் தலைமையிலான குழு

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு மிக்க மகிழ்ச்சியை தருகின்றது.

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு நேரில் வந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை பார்வையிடுவதற்கு கிடைத்த ஒரு சிறந்த வாய்ப்பாகவே இப்பயணத்தைக் கருதுகிறேன். வடக்கு - கிழக்கு மக்களின் விவசாய, மீன்பிடி மற்றும் கல்விசார் அபிவிருத்தி திட்டங்களிலும் கூட்டு உதவிகளை வழங்க எண்ணியுள்ளோம்.

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த இதுவே நல்ல தருணமாகும்.

பல ஆண்டுகளாக தமது உரிமைகளுக்காக போராடிவரும் இலங்கையின் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்கள் தமது நீண்ட வரலாற்றைக் கொண்ட போராட்டத்தில் சமாதான வழியில் பேசித் தீர்க்க எமது தாய்லாந்து தேசம் தான் முதலில் தளம் வழங்கியது என்பதையும் நாம் குறிப்பிட விரும்புகின்றோம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் எம்.எஸ்.எவ். இன் சேவைகள் இடைநிறுத்தம்

இலங்கையில் சேவையாற்றிவரும் எல்லை கடந்த மருத்துவ அமைப்பு யூலை மாதம் முதல் தனது சேவையை இடைநிறுத்தவுள்ளது.

இது குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பல மருத்துவ நிலையங்களை இந்த அமைப்பு நடத்திவரும் நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைக் கருத்திற் கொண்டு தனது சேவையை இடைநிறுத்தவுள்ளதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# கைதிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தைத் தாக்க முயற்சி

நாவலப்பிட்டியில் தமிழ் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட விளக்கமறியல் கைதிகள் விசாரணை முடித்து மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்ல முற்படும் போது ஆயிரம் பேர் கொண்ட குழு ஒன்று சிறைச்சாலை வாகனத்தைத் தாக்க முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோழமலை உமாதேவி (34) என்ற பெண்ணை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 8 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாகவும் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்திய பின் மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்ல முற்படும் போது நீதிமன்ற வளவை சுற்றி நின்ற ஆயிரம் பேர் அடங்கிய கூட்டத்தினர் மேற்படி வாகனத்தை தாக்க முற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசார் மிகுந்த சிரமத்துக்குபின் கூட்டத்தினரை கலைத்து வாகனத்தை எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

### சமாதானப்...

தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுசா, தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், பெண்கள் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கலைமகள் உட்பட போராளிகள் இவர்களை கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடலில் சிறிலங்கா உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது "எமது தலைவர் அவர்களைச் சந்தித்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றியும், அரசியல் சந்திப்புக்கள் பற்றியும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் குறித்து கலந்துரையாட இருக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

# போலிசாரிடம் இல்லை

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பாக தெளிவின்மை காரணமாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதாக மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மெதிவத கூறியுள்ளார்.

இதனைக் கருத்திற் கொண்டு மனிதஉரிமைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோத்தர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பொலிஸ்மா அதிபர் ரி.ஏ. ஆனந்தராஜா கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளார். எனவும் கூறியுள்ளார்.

### நெடுந்தீவில்...

வைத்திருக்கிறது.

நெடுந்தீவிலுள்ள முகாம் கடந்த மாதத்தில் அகற்றப்படுமென அமைச்சர் மிலிந்த மொறகொட அறிவித்திருந்தமை தெரிந்ததே.

### தமிழ்ச்செல்வன்...

தாய்லாந்துத் தூதுக்குழுவினர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். (பா)

### தென்பகுதி...

வித்தார்.

தற்போது அமுலில் உள்ள போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு குறிப்பிடத் தக்கமுன்னேற்றம் எதுவும் அமையவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இன்றைய அரசு தானாக விரும்பி வரவில்லை.

ரணில் விக்கிரமசிங்க புத்தருமல்ல, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் காந்தியுமல்ல விடுதலைப் புலிகளின் இராணுவபலத்தின் நிர்ப்பந்தம் காரணமாகவே இன்றைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலைக்கு வந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

- உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி -

# அவுஸ்திரேலிய அணியிடம் இங்கிலாந்து தோல்வி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் 'ஏ' பிரிவுப் போட்டி ஒன்றில் அவுஸ்திரேலிய அணி இரண்டு விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது.



முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 204 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ். பந்து வீச்சாளர் பைக்கல் 20 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இங்கிலாந்து அணிக்காக ரிஸ் கொத்திக் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ். அணி 49.4 ஓவர்களில் 206 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அவுஸ். அணிக்காக பெவன் 74 ஓட்டங்களையும், பைக்கல் 34 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காது பெற்றனர். பைக்கல் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தோல்வி காரணமாக சுப்பர் சிக்ஸிற்குள் இங்கிலாந்து நுழைவது கேள்விகுள்ளாகியுள்ளது.

# முக்கியமானதொரு போட்டியில் இன்று சிறிலங்கா – தென். ஆபி.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 'பி' பிரிவில் சிறிலங்காவுக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையில் முக்கியமான போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இரவு - பகல் ஆட்டமாக நடைபெறவுள்ள இப்போட்டியில் இரு அணிகளுக்கும் வெற்றி மிக முக்கியமாகவுள்ளது.

தென்னாபிரிக்க அணி அடுத்த சுற்றில் நுழைவதற்கு நிச்சயமாக இன்று அது வெற்றிபெற வேண்டியது அவசியமாகவுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா அணி இப்போட்டியில் தோல்வியடையுமானால் சில வேளைகளில் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை வேறொரு விதத்தில் இழக்கக்கூடும்.

நியூசிலாந்திற்கும், கனடா அணிக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் நியூசிலாந்து அணி அதிக ஓட்ட வீதத்தில் வெற்றி பெறுமானால் சிறிலங்கா அணியின் நிலை நெருக்கடிக்கு உள்ளாகும்.

இதேவேளை, சுப்பர் சிக்ஸிற்குள் அணிகளை அனுமதிக்கும் விதிகளை மாற்றி அமைக்குமாறு சிறிலங்கா அணி கோரியுள்ளது. அதாவது, ஓட்ட விகிதத்தைக் கருத்திற்கொள்ளாது முதல் சுற்றுப் போட்டியில் வெற்றி தோல்வி அடிப்படையில் அணிகளை அனுமதிக்குமாறு அது கோரியுள்ளது.

முதற்சுற்றுப் போட்டியில் நியூசிலாந்து அணி சிறிலங்காவிடம் தோற்றமை குறிப்பிடத்தக்கது.

### சிறிலங்காவின்...

தற்கு முன்னரே சகவாழ்வு ஆட்சி முறையின் முக்கியத்துவத்தை பிரதம மந்திரிக்கு வலியுறுத்தி உள்ளேன்.

சகவாழ்வு ஆட்சிமுறைக்கு நான் பங்களிப்பை வழங்கியுள்ளேன். அரசாங்கத்தினால் இதற்கு அளிக்கப்பட வேண்டிய பங்களிப்பு எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்குத் தெரியாது.

என்னிடம் உள்ள செயலாற்று அதிகாரங்களில் சிலவற்றை பிரதமரிடமும் கையளித்துள்ளேன்.

தெற்காசியாவிலுள்ள சில நாடுகளும் மலேசியாவும் இலங்கையைவிட அபிவிருத்தியில் முன்னடைந்துவிட்டன. இந்தப் பின்னடைவுக்கு கடந்த முப்பது வருடங்களாக நாட்டை ஆண்ட தலைவர்களின் குறைபாடே காரணமாகும் என்றார்.

# சாவு அறிவித்தல்

## முருகேசு ஆனந்தநடராசா

(இளைப்பாறிய புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்)

துன்னாலை தெற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி 4ஆம் வாய்க்கால் கருடிப்போக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஆனந்தநடராசா 28.02.2003 அன்று பருத்தித்துறை புலோலி தெற்கு உபயகதிர்காமத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு சின்னம்மாவின் ஏக புத்திரனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சபாரத்தினம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கலைவாணி (U.K) கலைவதனி (U.K) கலைச் செல்வி (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரதாஸ் (U.K) குருநாதன் (U.K) மதிவேந்தன் (U.K) ஆகியோரின் மாமனாரும் செல்வராணி (U.K) திலகராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சஞ்சீவ், சஜீவன், மதுமிதா, பிரவீன், ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 28.02.2003 அன்று புலோலி தெற்கு உபய கதிர்காமத்தில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உபயகதிர்காமம்
புலோலி தெற்கு
புலோலி. (சீ-7694)

தகவல்
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.